(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 21.]**

# பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரம்

## 2025 பெப்ரவரி 18, செவ்வாய்க்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

98/2024

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2023 அக்டோபர் 22 தொடக்கம் 2024 அக்டோபர் 21 வரையில் பெற்றோலிய விற்பனையின் மூலம் ஈட்டப்பட்ட வரி வருமானம் எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி காலப்பகுதியினுள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஈட்டிய இலாபம்/ அடைந்த நட்டம் எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி காலப்பகுதியினுள் எரிபொருள் விற்பனையில் ஏதேனும் மோசடிகள் இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், ஒரு லீற்றரிலிருந்து மோசடி செய்யப்பட்ட பணத்தொகை ஒவ்வொரு வகை எரிபொருளின் அடிப்படையில் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(v) மோசடி செய்யப்பட்ட மொத்த பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(vi) ஒரு லீற்றர் எரிபொருளிலிருந்து மோசடி செய்யப்பட்ட தொகையைக் குறைத்ததன் பின்னர் கிடைக்க வேண்டிய நிவாரணம் தற்பொழுது மக்களுக்கு வழங்கப்படுகிறதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

112/2024

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிங்கிரிய ஏற்றுமதி செயலாக்க வலயம் தாபிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி வலயத்திற்காக இன்றளவில் கிடைத்துள்ள முதலீடுகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெறுமதி வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி முதலீடுகளால் இன்றளவில் உருவாக்கப்பட்டுள்ள நேரடியான மற்றும் மறைமுகமான வேலைவாய்ப்புகளின் எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதையும்;

(iv) மேற்படி ஏற்றுமதி வலயத்தை மேலும் அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

133/2024

கௌரவ சட்டத்தரணி சித்ரால் பெர்னாந்து,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையின் நீதிமன்றக் கட்டமைப்பில் விசாரணையிலுள்ள ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட மற்றும் பத்து வருடங்களுக்கு மேற்பட்ட குடியியல் வழக்குகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(ii) வழக்கு விசாரணைகளை நிறைவு செய்வதில் ஏற்படுகின்ற தாமதத்தைத் தவிர்ப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

247/2024

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ‘COVID-19 சந்தேகத்திற்கிடமான மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட நோயாளி களுக்கான சிகிச்சைக்குரிய நடைமுறை வழிகாட்டுதல்கள்’ தொடர்பான வெளியீட்டினைப் பற்றி அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வெளியீட்டின் உள்ளடக்கத்திற்கும் விதப்புரைகளுக்கும் பங்களித்த துறைசார் வல்லுனர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) அவர்கள் துறைசார் வளவாளர்களாகப் பணியாற்றும் போது அவர்கள் இணைக்கப்பட்டிருந்த நிறுவனங்கள் மற்றும் பதவிகள் யாவை என்பதையும்;

(iv) அவர்களை நியமிப்பதற்குப் பொறுப்புடைய அதிகாரி யார் என்பதையும்;

(v) அவர்களைத் தெரிவு செய்வதற்குப் பின்பற்றப்பட்ட அளவுகோல்கள் அல்லது அடிப்படைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வெளியீட்டின் பிரிவு 7 தொடர்பில் அவர் அறிந்திருக்கின்றாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்குறிப்பிட்ட பிரிவின் உள்ளடக்கத்திற்கும் விதப்புரைகளுக்கும் பொறுப்பான குறிப்பிட்ட துறைசார் வல்லுனர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) பிரிவு 7 இன் உள்ளடக்கத்தினையும் விதப்புரைகளினையும் உருவாக்குவதற்குப் பயன்படுத்தப்பட்ட செயன்முறை, ஆவணங்கள் மற்றும் உசாத்துணைகள் என்பவற்றினை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) பிரிவு 7 இல் காணப்படும் விதப்புரைகள் உள்நாட்டு அல்லது சர்வதேச மருத்துவ நெறிகள் மற்றும் மருத்துவ மானுடவியல் துறையிலுள்ள நிபுணர்களின் தொழில்சார் அபிப்பிராயத்திற்கு உட்படுத்தப்பட்டதா;

என்பதையும் அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

296/2024

கௌரவ சாமர சம்பத் தசனாயக,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாகாண சபை பாடசாலைகளிலிருந்து தேசிய பாடசாலைகளுக்கு அரச ஆசிரியர்கள் இணைக்கப்பட்டுள்ளார்கள் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி ஆசிரியர்கள் இணைக்கப்பட்டுள்ள கால எல்லையை மீண்டும் நீடிக்காதிருக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி கால எல்லை நீடிக்கப்படாததால், தேசிய பாடசாலைகளில் ஏற்படும் ஆசிரியர் வெற்றிடங்கள் எவ்வாறு சமநிலைப்படுத்தப்படும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

ஒதுக்கீடு சட்டமூலம் — (ஒதுக்கப்பட்ட முதலாம் நாள்) — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 பெப்ரவரி 17) [1].

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

**[1]** ''சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக'' எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.